ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௪. பிரபவ௵ ஐப்பசி௴ பகுதி ௰.
Vol 4. *October & November 1927.* No. 10.

ப்ரஹ்மஸூத்ர பாஷ்ய வரலாறு.

ஸம்ஸாரிசேதனர்கள் கர்ப்ப ஜன்ம பால்ய யௌவன வார்த்தக மரண நரகங்களென்கிற எழுவித அவஸ்தாரூபமான ஸம்ஸார சக்ரத்தில் அகப்பட்டு உழன்று வேறொரு புருஷார்த்த முளதென்றும், அதற்கு உபாயமின்னதென்றும் அறியாமல் தேகமே ஆத்மாவென்றும், அதன் போஷணமே பரமபுருஷார்த்தமென்றும் நினைத்து அதற்காக மேன்மேலும் ஸம்ஸாரத்தில் முயன்று காமக்ரோதாதிகளையுடையராய் இன்னது செய்வது தவிர்வதென்ற அறிவற்றவர்களாய் * தாபத்திரயங்களாலும், † ஈஷணாத்ரயங்களாலும் நோவுபட்டுத் தம்துக்கமன்றிக்கே தமது புத்ரகளத்திராதிகளையும் தமக்குயிர்த்துணைவர்களாக மயங்கி அவர்கள் துக்கத்தையும் ஏறிட்டுக்கொண்டு ஒரு க்ஷணமாத்ரமும் ஸுகமின்றித் துன்பக்கடலில் அழுந்துவதை அருளுடைய ஸர்வேச்வரன் கண்டு ஐயோ! நித்யமாய் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமான தமது ஸ்வரூபத்தைமறந்து மிக்க துன்பத்தையுடைய சரீரத்தை அபிமானித்துக்கொண்டு மஹத்தானதுக்கத்தை அநுபவிப்பதே! என்று இவர்கள்பக்கல் இரக்க

---

* தாபத்ரயம்-தன்னாலும் பிறிதொன்றாலும் தெய்வத்தாலும் வருகின்ற துன்பங்கள்.

† ஈஷணாத்ரயம்-பொன் புத்ரன் மனைவியர்பாலுள்ள விருப்பம்.

முற்றவனும் இவர்களை இத்துன்பக்கடலினின்றுங் கரையேற்றத் திருவுள்ளங்கொண்டு தான் அந்நப்பக்ஷி முதலிய அநேக அவதாரங்களை எடுத்தும் பிர்ம்மா, நாரதர், ஸநகாதிகள் மநு முதலியவர்களைக் கொண்டும் ஜ்ஞாநத்தை க்ருதயுகத்தில் ப்ரவர்த்திப்பித்தருளினன்.

பின்பு அந்த ஜ்ஞாநம் த்வாபரயுகாந்தத்தில் க்ஷீணமடைந்து அஜ்ஞாநத்தில் அழுந்திக்கிடக்கிற இவ்வுலகினைக்கண்டு பிர்ம்மாதி தேவர்கள் எம்பெருமானிடம் சென்று "ஸ்வாமி! தேவரீர் ஜ்ஞாநத்தைத்தந்து இவ்வுலகை நல்வழியிலுய்க்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். அவனும் அப்பிரார்த்தனைக்கு இரங்கியருளி ஸ்ரீபராசரபகவானுடைய கர்ப்பத்தில் வேதவிபாசரூபியாய் அவதரித்தான். பின் வேதவியாசர் சிதறிக்கிடந்த வேதங்களை ருக் யஜுர் ஸாமம் அதர்வணமெனப் பாகுபடுத்தி மேலும் வேதார்த்த நிர்ணயம் செய்யத் திருவுள்ளம்பற்றித் தம்முடைய முக்ய சிஷ்யரான ஜைமினியைக் கொண்டு வேதத்தின் பூர்வபாகமான கர்மகாண்ட தேவகாண்டங்களின் அர்த்தத்தைப் பூர்வமீமாம்ஸை என்னும் சாஸ்திரத்தால் வெளியிட்டு, உபநிஷத்துக்களென்று வழங்கப்பெறும் உத்தரபாகமான பிர்ம்மகாண்டத்தின் பொருளை பிர்ம்மஸூத்ரமென்னும் வேதாந்த சாஸ்திரத்தினல் வெளியிட்டருளினர்.

இந்த சாஸ்த்ரம் நான்கு அத்யாயங்களைத் தன்னிடத்திற் கொண்டுளது. அவற்றுள் முதல் அத்யாயத்தில், சிறந்த புருஷார்த்தமாகிய மோக்ஷத்தை விரும்பின புருஷனுக்கு த்யாநம் செய்யத்தக்கதாய்ச் சொல்லப்பட்ட ஜகத்காரணமான பொருள், எல்லாச் சிதசித்வஸ்துக்களைக் காட்டிலும் விலக்ஷணமாயுள்ள பரப்ரஹ்மமென்று நிரூபிக்கப்பட்டது. இரண்டாம் அத்யாயத்தில் ஜ்ஞாநமற்றதாய் உற்பத்தி விநாசங்களையுடையதாயுள்ள அசித்தத்வமான மூலப்ரக்ருதியும், அற்ப ஜ்ஞாநமும் அற்பசக்தியுமுடைய சித்தத்வமாகிய ஜீவனும் என்கிற இவ்விரண்டைக்காட்டிலும் விலக்ஷணமாய் எல்லாமறிந்தவனாய் எல்லாவாற்றலுமுடையவனாய் சித் அசித் என்கிற இரண்டு தத்வங்களையும் தனக்குச் சரீரமாகவுடையவனான பரப்ரஹ்மமே ஜகத்காரணமென்று வேதத்தின் தாத்பர்யத்தைக்கொண்டு முதல் அத்யாயத்திற் சொல்லப்பட்ட அர்த்தம், வேதத்திற்கு

அபார்த்தம் சொல்கின்றவாது யுக்தியினால் அற்பவறிவுடையோர் கள் மனக்கலக்கமுறுதிருக்க அவர்கள் சொல்லும் குயுக்திகளைக் கண்டித்து நிரூபிக்கப்பட்டுளது. மூன்றாவது அத்யாயத்தில் முன்னர்க் கூறப்பட்ட ப்ரஹ்மத்தை யடைவதற்கு உபாயமாக பக்தி ஸ்வரூபம் சொல்லப்படுகிறது. நான்காம் அத்யாயத்தில், அந்த பக்திக்கு அர்ச்சிராதி மார்க்கமாக ப்ரஹ்மப்ராப்தியே பிரயோஜனமென்று சொல்லப்படுகிறது. இந்த நான்கு அத்யாயங்களில் நூற்றைம்பத்தாறு அதிகரணங்களும், ஐந்நூற்று நாற்பத்தைந்து ஸூத்ரங்களும் உள்ளன. [விஷயம், ஸம்சயம், பூர்வபக்ஷம், ஸித்தாந்தம், பிரயோஜனம், என்ற இவ்வைந்துமடங்கியது அதிகரணமாம்.]

இந்த ப்ரஹ்ம ஸூத்திரங்களுக்குப் போதாயநரென்ற மஹருஷி வ்ருத்தி என்ற வ்யாக்யானம் செய்தார். அந்த வ்யாக்யானம் மிகவும் விரிவுடையதாதலால் அற்பமதியுடையார் அதைக் கற்று அர்த்தமறிந்து கொள்வதற்கரிதாயிருப்பதை ஆராய்ந்து பின்புள்ள டங்கர், த்ரமிடர், குஹதேவர் என்ற ருஷிகள் வ்ருத்தியிலுள்ள அர்த்தங்களைச் சுருக்கியெடுத்து ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு ஒருரை யியற்றினர். இவ்வுரை சுருக்கமாயிருந்ததினால் இதில் பொதிந்து விளங்கும் கம்பீரமான அர்த்தங்களை நுண்ணறிவிலார் அறிதற்கு ஆற்றலற்றவராயினர். அதன்பின் சேஷாம்சமான ஸ்ரீபகவத் ராமாநுஜாசார்யர் மிகவிரிவும் சுருக்கமுமின்றி முன்னர்க் குறிப்பிடப்பெற்ற பூர்வர்களின் கொள்கைக்குப் பொருத்தமாகப் பாஷ்யம் செய்தருளினர். இதுநிற்க;

ப்ரஹ்மஸூத்ரத்துக்குச் சங்கர பாஸ்கர யாதவர்கள் போதாயநாதி பூர்விகர்களின் கொள்கையை அநுஸரியாமல் தங்கள் மனதில் தோற்றியபடி வெவ்வேறு அர்த்தங்களைக் கற்பித்தும் உபநிஷத்துக்களில் ஸகுணபரமான வாக்யங்கள் அபரமார்த்தபரங்களென்றும், நிர்க்குணவாக்யங்களே பரமார்த்த பரப்ரஹ்ம போதகங்களென்றும், பலவாறாக உரைத்து உண்மையான அர்த்தங்களை மறைத்து விட்டனர். இவர் பூர்வாசார்யர்களின் கொள்கைக்கு ஒரு சிறிதும் மாறுபடாமல் உள்ளவாறு அர்த்தத்தை வெளியிடவேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு போதாயநவ்ருத்தியைப் பார்ப்பதற்

குச் சாரதாபீடத்திற் கெழுந்தருளி அங்கு ஸரஸ்வதிதேவி எடுத்துக்கொடுத்த போதாயநவ்ருத்தியை ஒருமுறை ஆராய்ந்து அதற்குத் தகுதியாக ஸ்ரீபாஷ்யம் செய்தருளினார்.

அதன் பிறகு பாஷ்யகாரர் திக்விஜயத்திற்கெழுந்தருளி ஆங்காங்குள்ள பல வித்வான்களை ஜயித்துக்கொண்டு வருகிற கிரமத்தில் சாரதாபீடத்திற்கும் எழுந்தருள அப்பொழுது சரஸ்வதி வாசலில் ப்ரத்யக்ஷமாய் “𑌤𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾 𑌕𑌪𑍍𑌯𑌾𑌸𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌮𑍇𑌵 𑌮𑌕𑍍𑌷𑌿𑌣𑍀” “தஸ்யயதா கப்யாஸம் புண்டரீகமேவ மக்ஷிணீ” என்ற சுருதிக்குப் பொருளுரைப்பீர் என்று கேட்க உடையவர், ‘கம்’ என்றால் ஜலம் ‘கபி’ என்றால் அந்த ஜலத்தைக் கிரணங்களினால் பாநஞ்செய்கிற ஸூர்யன், ‘கப்யாஸம்’ என்றால் அந்த ஸூர்யனால்அலர்த்தப்பெற்ற தாமரைப்புஷ்பம்; அதுபோன்ற கண்களையுடையவன் ஸூர்யமண்டலமத்தியில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீமந்நாராயணன்; என்று பொருளுரைத்தார். ஸரஸ்வதி அதைக்கேட்டுச் சிலர் இந்தச்சுருதி வாக்யத்திற்குக் குரங்கினுடைய ப்ருஷ்டபாகம் போன்ற கண்ணென்று அற்பமான பொருளுரைத்தனர். நீர் இப்பொழுது இந்த வாக்யத்துக்கு உண்மையான பொருளுரைத்தீராதலால் இனி உமக்கு ஸ்ரீபாஷ்யகாரர் என்ற பிரஸித்த நாமம் வழங்குவதோடு உம்மால்ஸாதிக்கப்பெற்ற பாஷ்யத்திற்கும் ஸ்ரீபாஷ்யமென்று வழங்கக்கடவதென்று உகந்தருளினாள். அன்று தொட்டு ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு உண்மைப்பொருள் உலகிற்பரவலாயிற்று.

ஸ்ரீ:

பன்மணித்திரள்.

மாறன் மறைத்திறம்.

ஓதியோதி உணரவுணர ஐயந்திரிபுணர்வகற்றித் தத்வஜ்ஞாநத்தைப் பிறப்பிப்பதே வேதத்தின் இயல்பாகும். ப்ரபந்நஜநகூடஸ்தராகிய நம்மாழ்வார் ஒப்புயர்வற்ற ஸர்வேசுவரனுடைய அநுக்ரஹ

விசேஷத்தால் சிதசிதீசுவர தத்வங்களை உள்ளவாறறிந்த ஆப்ததம ராதலால் இவரருளிய தமிழ்வேதம் அஜ்ஞாநத்தை யகற்றித் தத்வ ஜ்ஞாநத்தைத் தருவதில் தலைசிறந்ததாயிருக்கும். ஆகையா லன்றோ நம்பூர்வாசார்யர்கள் இதை யாராய்வதே தமக்குப் பெரும் பேறுகக் கருதி இதன் அர்த்தவிசேஷத்தை யறிந்து தம்மை யடைந் தோருக்கும் உபதேசித்துப் போந்தார்கள். நஞ்சீயர் திருவாய்மொழி யைச் *சதாபிஷேகஞ் செய்தாரென்பதும், நம்பிள்ளை திருவாய் மொழியின் ஈட்டை அழகியமணவாளனும் செவிசாய்த்துக் கேட்கும் படி எப்பொழுதும் காலக்ஷேபம் செய்துகொண்டிருந்தாரென்பதும், ஸ்ரீமணவாளமாமுனி 'முப்பத்தாறாயிரப்பெருக்கர்' என்று யாவ ரும் கொண்டாடுமாறு அழகியமணவாளன் சிஷ்யனுய்வந்து 'ஸ்ரீசை லேச' தனியன் அருளிச்செய்யும்படி திருவாய்மொழியைப் பரக்க உபந்யாஸஞ் செய்தனரென்றும் பிரஸித்தமன்றோ! இதுநிற்க;

மாறன்பணித்த மறையானது, அளவிறந்த சாகைகளோடுகூடிய வேதங்களிலே எளிதிற் காணவொண்ணுதபடி மறைந்துகிடந்த தத் வப்பொருள்களையெடுத்துத் தெளிவுறச்சொல்லி அவ்வேதங்களின் சிறப்பைப் பிரகாசிப்பதாயும், தமிழ்ப்பாஷைக்குப் பிரதானமாயும், எல்லா நூல்களுக்குத் தாயாகவும் விளங்கும். இன்னும் வேதத்தை ஸாங்கோபாங்கமாக அத்யயனஞ்செய்து அதன் அர்த்தங்களை ஆராய்வதே தமக்குப் பணியாகக்கொண்டுள்ள அந்தணர்கள் வேத வாக்யங்களில் தமக்கு ஸம்சயம் நிகழ்கிறவிடத்தில் திருவாய்மொழி யை அப்யஸித்து அந்த ஸம்சயத்தை அகற்றிக்கொள்கிறார்களென் றால் இதன் பெருமையை என்னென்று சொல்வது! இதுபற்றியே கம்பரும்,

ஆயிரம்மறைக்குமலங்காரமருந்தமிழ்க்குப்
பாயிரமாற்கவிக்குப்படிச்சந்தம்பனுவற்கெல்லாம்
தாயிருநாற்றிசைக்குத்தனித்தீபந்தண்ணங்குருகூர்ச்
சேயிருமாமரபுஞ்செவ்வியான்செய்தசெய்யுட்களே.

என்றும்,

* திருவாய்மொழியைச் சதாபிஷேகஞ் செய்வதாவது:— நூறுதடவை திருவாய்மொழியின் வ்யாக்யானத்தைச்சேவித்துச் சாத்துமுறைசெய்வதாம்.

உயிர்த்தாரையிற்புக்குறுகுறம்பாமொருமூன்றனேயுஞ்
செயிர்த்தார்குருகைவந்தார்திருவாய்மொழிசெப்பலுற்ருன்
மயிர்த்தாரைகள்பொடிக்குங்கண்கணீர்மல்கும்மாமறையுள்
அயிர்த்தாரயிர்த்தபொருள்வெளியாமெங்களந்தணர்க்கே.

என்று முரைத்தார்.

இன்னும், மாறனலங்கார நூலுடையராகிய திருக்குருகைப் பெருமாள் கவிராயரும,

"நாம்பிரமமென்றேநவில்வாருமன்னுயிர்க
டாம்பிரமத்தொன்றுமெனுஞ்சார்பாரு-மாம்பிரம
நாரணனேயென்பாருநாவீறுடையபிரா
ஞரணப்பாக்கற்றுணராதார்."

என்ற இச்செய்யுளால் மாறன் மறைத்திறத்தை நன்கு புலப்படுத்தியுள்ளார். இதன் பொருளாவது:— * "பேரானந்தச் சிற்குணநிகச் சுடர்ச்சொரூப ரூபப்பரத்துவமென்னும் பரமபதநாதன் அனிருத்தனுகி யுந்தியந்தாமரைப் பொகுட்டிற் பலகோடி யண்டங்களைப் படைத்துப் பலகோடி யண்டந்தோறும் பலகோடி பிரமாதிகளைப் படைத்தழிவிலதா யலகிறந்த வணுக்கடோறும் திவ்வியாத்மசொரூப வியத்தியுடன் சருவபூத பூரணகாரணனுகிய மீனவதார முதலாய வவதாரங்களாலும் அம்சாவதாரங்களாலுங் காவல்பூண்டு வாழ்நாளுட் டன்னல், லீலைக்காக வமைத்த அவையனைத்து மழிந்துந் தானழியாது ஏகோதகத்தின்மேல் ஓராலிளந்தளிருள் அடங்கும் பச்சைக்குழவியாகியும் பல்லாயிரங்கோடியண்டமாகியவற்றை யகத்திட்டு மறித்தும் புறத்திட்டுக் காவல் பூண்டு விளையாடும் அகடிதகெடித சாமர்த்திய குணங்களுளொரு குணமுமின்றி யிருவினைத் தளைப்பட்டு மலமூத்திராதிகளாலாய பாண்டத்தோடு பிறந்தும் பிறந்து முழலு முத்தியறியா மூடராகி நாம் பிரமமென்றே நாக்குத் தடுமாறுது நவிலு மொருசார்பாரும், கற்றறி நூல் பல கற்றனராகித் தத்துவ முணர்ந்தும் பற்றறச்சாலோக முதலிய மூன்று மெய்தி யிருவராயிருந் திறில்பேரின்ப மொருவராமெனத் துய்க்குஞ்

* இவ்வுரை மாறனலங்கார நூலாசிரியரின் சிஷ்யருள் ஒருவராகிய காரிரத்ன கவிராயரால் இயற்றப்பெற்றது.

சுகானந்தத்தைக் கெடுத்துக் கூடாததனைக் கூடுவதாக்கிச் சூனியப் படுத்தி மன்னுயிர் பிரமத்தோடு மொன்றுமென்று நாயனடிமைத் திறம் நழுவிய மூடரா மொருசார்பாரும், ஆதியு மந்தமு மருமறை யரியென வோதிய பொருளுரைக் குடையதை யறிந்தும் அகிலாண்ட கோடி பிரமாண்டநாயகனென்ன முத்திதருவதாம் பிரமம் சீமந்நாரா யணனே வென்றையுறு முழுமூடரும் ஒருநான்மறைத் துணி வோதாதுணர்ந்த நாவீறுடையபிரான் கூறிய திருவாய்மொழியைக் கற்றுண்மைப் பொருளுணரா மூவகை மூடரென்றவாறு. ஆரணத் தின் வழிவந்த நூலாதலாற் றிருவாய்மொழிக் காரணப்பாவென்ப தாகுபெயர். அல்லதூஉந் தமிழ்வேதமென்றும் அதற்குப் பெயர். ஆரணப்பாக் கற்றுணராதா ரெனவே யதனைக் கற்றுணர்ந்தா ரவை கூறுரென்னுங் கூற்று மெஞ்சி நிற்பதூஉங் காண்க. இங்ஙனம் கூறிய மூன்றும் வேதத்தின் வழிவந்த திருவாய்மொழியாகிய பனு வற்றுணிவன்றென்பதூஉம் அதனைக் குரவரா லுணர்ந்தோர் மத மும் அம்மூன்றினையுந் தள்ளினமதமே யென்னுமவையுங் குறிப் பெச்சம்......" என்பதாம்.

ஆழ்வாரின் சிஷ்யராகிய மதுரகவியாரும்

"அருள்கொண்டாடுமடியவரின்புற
அருளினனவ்வருமறையின்பொருள்
அருள்கொண்டாயிரமின்றமிழ்ப்பாடினன்
அருள்கண்டீரிவ்வுலகினில்மிக்கதே".

என்று அருளிச்செய்துள்ளார். இங்கு மதுரகவியார் ஆழ்வார் திரு வாய்மொழி அருளிச்செய்து உலகிற்குபகரித்ததைப் பாராட்டி அவ ருடைய அருளைக்கொண்டாடியதனாலும் அவரருளிய மறையின் மஹிமை யறியலாகும்.

மேலும் இதன் பெருமையை உலகிற் கறிவிப்பதற்கே லோகா சார்யரின் திருத்தம்பியராகிய அழகியமணவாளப்பெருமாள் நாய னார் ஆசார்யஹ்ருதயம் என்ற ஒரு க்ரந்தம் அருளிச்செய்துள்ளார். அதில் இதன் வைபவம் சுருக்கமின்றிக் காணலாம்.

ஆசார்யன் அருண்மொழி.

ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பந்நனுகிய ஆசார்யன், சிஷ்யன்மீது இரக்கங்கொண்டு அருளிய வாக்யத்தையே சிஷ்யன் தஞ்சமாகப் பற்றியிருப்பனுகில் பேறுஸித்திப்பதில் ஐயமில்லை. இதற்குச் சான்ருக ஒரு ஐதிஹ்யம் உரைக்கப்படும். அதுவருமாறு:—

"நம்பிள்ளையும் முதலிகளுமாகக் கோயிலில் எழுந்தருளியிருந்து தரிசனம் நிர்வஹித்துக்கொண்டு வாழ்ந்தருளுகிற காலத்திலே நம்பிள்ளை ஸ்ரீபாதத்திலே ஆசிரயித்திருப்பாளொரு அம்மையாருக்குத் திருமாளிகைக்கு அருகே ஒருகோல்துறை நிவேசநமுண்டாயிருக்க அவளுக்கு ஸப்ரஹ்மசாரியாயிருப்பாரொரு ஸ்ரீவைஷ்ணவர், 'பிள்ளை திருமாளிகை நெருக்கமாயிருக்கிறது, இந்த ஒருகோல்துறையை அவருக்கு ஸமர்ப்பியும்' என்று அம்மையாருக்குப் பலகாலுமருளிச்செய்ய; அவளும் கோயிலிலே ஒருகோல் துறையாருக்குக்கிடைக்கும், நான் திருவடிச்சாருந்தனையும் கொடேனென்ன; ஸ்ரீவைஷ்ணவரும் இச்செய்தியைப் பிள்ளைக்கு விண்ணப்பஞ்செய்ய; பிள்ளையும் அம்மையாரை யழைத்தருளி, உமக்கு ஒரு சரீரத்திற்குச் சற்றிடமன்றோ வேண்டுவது, முதலிகள் எழுந்தருளியிருக்க நெருக்கமாயிருக்கிறது, உம்மொருகோல்துறையும் நமக்குத் தரவேணுமென்ன; அம்மையாரும், அப்படியே செய்கிறேன்; தேவரீர் பரமபதத்திலே அடியேனுக்கு ஒருகோல்துறையைத் தந்தருளவேணுமென்ன; அதற்கு ஸ்ரீவைகுண்டநாதனன்றோ கடவன், அவனுக்கு விண்ணப்பஞ்செய்துகொண்டு தருகிறோமென்றருளிச்செய்ய; அவளும் அடியேன் ஸாது அதிலே பெண்பெண்டாட்டி, தருகிறோமென்ற வார்த்தை மாத்திரம் போராது எழுதித்தரவேணுமென்ன; பிள்ளையும் இப்படியுங்கேட்பதே! என்று திருவுள்ளம் உகந்து இன்னவருஷம் இன்னமாஸம் இன்னதேதி இந்த அம்மையாருக்குத் திருக்கலிகன்றிதாஸன் பரமபதத்திலே ஒருகோல்துறை எழுதிக்கொடுத்தான், அகிலலோகஸ்வாமியான ஸ்ரீவைகுண்டநாதன் க்ரயம்செலுத்திக் கொடுத்தருளவேணுமென்று ஶாஸநமெழுதித் தம்முடைய திருவெழுத்துச் சாத்திக்கொடுத்தருளினர். அம்மையாரும் திருமுகத்தை சிரஸாவஹித்து ப்ரீதி

யுடனே வாங்கிக்கொண்டு தீர்த்தப்ரஸாதங்களும் ஸ்வீகரித்து அன்றும் மற்றைநாளும் பிள்ளையை ஸேவித்துக்கொண்டிருந்து மூன்றும் நாள் பரமபதத்திலே சென்றாள்" என்பதாம்.

த்வாதச ஆதித்யர்.

பன்னிரு மாதங்களுள் ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொரு ஸூர்யன் அதிபனாகவிருந்து உலகினை விளக்குகின்றனனென்பது யாவருமறிவர். கச்யப்ரஜாபதிக்கு அதிதியின் வயிற்றிற் பிறந்த ஸூர்யனை ஒருகாரணத்தால் பன்னிரு கூறுயினனென்பர். அஃதாவது:— ஸூர்யனுடைய பார்யையான ஸம்ஜ்ஞை யென்பவள் கல்பாந்தத்தில் இவனுடைய அதிதீவ்ரமான ப்ரகாசத்தைப்பொறுக்க மாட்டாதிருக்க அப்பொழுது இவளுடைய பிதாவான த்வஷ்டா வென்பவன் இந்த ஸூர்யனைப் பன்னிருதுண்டங்களாக்கிவிட்டான். அவற்றுள் ஒவ்வொரு துண்டமும் ஒவ்வொரு ஸூர்யனாகி வெவ்வேறு நாமத்தையடைந்து பன்னிருமாதங்கட்கும் ஒவ்வொருவன் தனித்தனியே அதிபதியாக விளங்கினன் என்பதாம். அவர்களின் பெயர்களாவன:— (1) விவஸ்வான், (2) அர்யமா, (3) பூவிதாதா, (4) த்வஷ்டா, (5) ஸவிதா, (6) பகன், (7) தாதா, (8) விதாதா, (9) வருணன், (10) மித்ரன், (11) சக்ரன், (12) உருக்கிரமன் என்பனவாம்.

ஸ்ரீ:

யக்ஷப்ரச்நம்.

(208-ம் பக்கத்தொடர்ச்சி.)

(க) யக்ஷ:- 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌤𑍍𑌸𑍁𑌪𑍍𑌤𑍋 𑌨𑌨𑌿𑌮𑌿𑌷𑍇𑌤𑍍 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌜𑍍𑌜𑌾𑌤𑌂 𑌨𑌚𑍇𑌙𑍍𑌗𑌤𑍇
𑌕𑌸𑍍𑌯𑌸𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑍃𑌦𑌯𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑍇𑌗𑍇𑌨 𑌵𑌰𑍍𑌧𑌤𑍇 ॥

கிம்ஸ்வித் ஸுப்தோ நநிமிஷேத் கிம்ஸ்விஜ்ஜாதம் நசேங்கதே
கஸ்யஸ்வித் த்ருதயம் நாஸ்தி கிம்ஸ்வித்வேகே நவர்த்ததே.

(க) இனி, முமுக்ஷுவான ஜீவன் மனதின் கார்யமாகிய சிந்தையை ஒழிக்கவேண்டுமெனவே "காரியநாசாத் காரணநாச:" என்ற நியாயப்படி மன

(இ-ள்) தூங்குவது எது கண்மூடுவதில்லை? பிறந்தது எது நகர்வதில்லை? எதற்கு ஹ்ருதயமில்லை? வேகத்தினால் விர்த்தியடைவதெது? எ-ம்.

தா்ம:- ஸுப்த꞉ ஸாதோ ந நிமிஷதி அண்டம் ஜாதம் ந சோபதி।
அச்மனோ ஹ்ருதயம் நாஸ்தி நதீ வேகேந வர்த்ததே॥

மத்ஸ்ய: ஸுப்தோ நநிமிஷதி அண்டம் ஜா்தம் நசோபதி
அச்மனோ ஹ்ருதயம் நாஸ்தி நதீவேகேந வர்த்ததே.

(இ-ள்) (30) தூங்குகிற மீன் கண்மூடுவதில்லை. (31) பிறந்த

வொழிவும் ஏற்படும். எவ்வாறெனின்; முமுக்ஷுவான ஜீவன் சிந்தையை ஒழித்து ஒரு நிலைப்பட்ட மனதைக் கருவியாகக்கொண்டு ஆத்ம ஸாக்ஷாத்காரத்தைப் பெறுவான். இங்ஙனம் பெற்றபின் நதியைக் கடந்தபின் ஓடம் கைவிடப்படுவதுபோல ஸாதனமாகிய மனது கைவிடப்படும். (ஒழிவடையும்.) இவ்வாறு மனம் ஒழிவடைந்துவிடுமாயின் அவன் எதைக் கருவியாகக்கொண்டு தன்னை (ஆத்மாவை) ஸாக்ஷாத்கரிக்கக்கூடும் என்று ஐயம்நிகழ அதற்குச் சமாதானம் கூறப்படுகிறது.

(30) மீனுக்கு இமை கிடையாதாதலால் அது தூங்குகிற காலத்திலும் கண்மூடாமலேயிருக்கும். இந்த மீன் என்றசொல் உவமையாகுபெயராய் மீன் போன்ற தன்மையுடையவனை யுணர்த்தும். அவனாவான் சமதமாதி சாதனங்களைக்கொண்டு ஆத்மஸாக்ஷாத்காரத்தைப்பெற்ற ஜீவன் முக்தனாம். நீர்நிலையிற் பலவிடங்களிலும் சஞ்சரித்துப் பின்பு சிரமத்தினால் தூங்குகிற மீனானது இமையில்லாதிருந்தும் தூங்குவதுபோலப் பிறவிக்கடலுள் உழன்று திரிந்து அதன்பின் சிரமத்தினால் நிவர்த்திமார்க்கத்தைப்பெற்ற ஜீவன் முக்தன் மனவொழிவுடையவனாயிருந்தும் ஆத்மஸாக்ஷாத்காரத்தையடைவான். அஃதாவது:— ஆத்மா ஸ்வயம் ப்ரகாசமுடையவனாதலால் தன்னை யறிதற்குப் பிறிதொரு சகாயமின்றி யறியக்கூடுமென்பதாம்.

இனி, ஜீவன் நித்யமாயிருக்க அவன் 'பிறக்கிறான்; இறக்கிறான்; என்ற வழக்கு எவ்வாறு பொருந்துமென்ற ஆசங்கைக்கு ஸமாதானம் உரைக்கப்படுகிறது.

(31) இங்கு முட்டை என்றசொல் பிண்டம் (சரீரம்) பிர்ம்மாண்ட முதலியவைகளையுணர்த்தும். 'பிறந்த முட்டை' என்றதனால் பிறத்தல் முதலிய விகாரங்களைப் பெறுவது அப்பிண்ட முதலியவைகளேயாமென்பதும், 'அது

முட்டை நகர்வதில்லை. (32) கல்லுக்கு ஹ்ருதயமில்லை. (33) வேகத்தினால் விர்த்தியடைவது நதியாம்; எ-று.

நகர்வதில்லை' என்றதனால் அவை யறிவற்றனவென்பதும், புருஷப்ரவர்த்தியினால் சலிப்பிக்கப்படுவனவென்பதும் பெறப்படும். ஆதலால் 'பிறந்த முட்டை நகர்வதில்லை என்று சொல்லப்பட்டது. இதனால் நித்யமான ஆத்மாவுக்குச் சரீர ஸம்பந்தமே பிறப்பென்றும் அதன் நீக்கமே இறப்பென்றுங் கொள்ளக்கிடக்கின்றன.

இனி, பிறந்தழியுமியல்பினையுடைய ஜடவஸ்துவின் ஸம்பந்தம் ஜீவனுக்குத் துக்கத்தைத் தருவதாயிருப்பதால் அதன் நீக்கம் எவ்வாறு வித்திக்குமென்பதுரைக்கப்படுகின்றன.

(32) கல் என்றது உவமையாகுபெயராய் கற்போன்ற வன்மையுடைய ஜீவன் முக்தனை யோகியைக் குறிக்கும். யோகிக்கு வன்மையாவது:— ஸ்தூலஸூக்ஷ்ம சரீரங்களிலுள்ள மயக்கவுணர்வை ஒழித்து ஸமாதியில் பிர்ம்ம ஸாக்ஷாத்காரத்தில் நிலைத்திருப்பதாம். ஹ்ருதயம் என்றது சோகத்திற்குக் காரணமான ஜடஸம்பந்தத்தைக் குறிக்கும். ஜீவனுக்குச் சரீரத்திலுண்டான மயக்கவுணர்வொழியவே சோககாரணமான ஜடஸம்பந்தமும் தானே ஒழிந்து விடுமாதலால் 'கல்லுக்கு ஹ்ருதயமில்லை' என்று சொல்லப்பட்டது.

சோககாரணமான ஜடஸம்பந்தத்தை ஒழித்து நிலைபெற்ற ஸமாதியிலிருந்து நித்யானந்தத்தை அநுபவிக்கும் ஜீவன்முக்தன் ஸமாதியினின்றும் ஒழிந்த சிற்சில சமயங்களில் உலக வ்யவஹாரங்களில் அவனது சிந்தை பற்றி நிற்கும். அங்ஙனம் நிற்றற்குக் காரணம் யாது? என்ற ஆசங்கை நிகழ அதற்குச் சமாதானம் கூறப்படுகிறது.

(33) நதியென்பது இங்கு உவமையாகுபெயராய்ச் சித்தத்தையுணர்த்தும். நதி விரைந்துசெல்லும் இயல்பினையுடையதாயிருப்பதுபோல் சித்தம் விஷயங்களில் விரைந்துசெல்லும் இயல்பினையுடையதாயிருக்கும். ஜீவன் முக்தனானவன் ப்ராரப்தசரீரத்தோடு கூடிக்கொண்டிருக்கும்வரையிலும் அவனுக்குப் பூர்வ வாஸனை அநுவர்த்தித்துக்கொண்டே இருக்கும். ஆதலால் இவன் ஸமாதிநிலையில் யாதொன்றிலும் பற்றின்றி ஆத்ம ஸாக்ஷாத்காரத்தைப் பெற்றிருந்தாலும், ஸமாதிநிலை தளர்வுற்ற சிற்சில சமயங்களில் அவனது சித்தம் லோகவ்யவஹாரங்களில் விரைந்து செல்லும். அதனால் இங்கு 'வேகத்தினால் விர்த்தியடைவது நதியாம்' என்றுரைக்கப்பட்டது. இவ்வாறு அவனது சித்தம் லோகவ்யவஹாரத்திற் பற்றியதாயினும் அவன் சித்தத்தையடக்கும் வன்மையுடையவனாதலால் அப்பற்றை ஒழித்து ஸமாதி நிலையை எளிதிற்பெறுவான். அந்நிலையில் அவன்முன்பு பற்றுதற்கு விஷயமாகிய பொருள்களெல்லாம் ஸ்வப்னத்திற்கண்ட பொருள்கள் ஸுஷுப்திகாலத்தில் தோன்றுதொழிந்து விடுகின்றனவோ அவ்வாறே ஒழிந்து விடும்.

(ம) யக்ஷ:- கிංஸ்விச் ப்ரவஸதோ மித்ரம் கிංஸ்வித் மித்ரம் க்ருஹே ஸத:।
ஆதுரஸ்ய ச கிං மித்ரம் கிංஸ்வித் மித்ரம் மரிஷ்யத:॥

கிம்ஸ்வித் ப்ரவஸதோ மித்ரம் கிம்ஸ்விங் மித்ரம் க்ருஹே ஸத:
ஆதுரஸ்ய ச கிம் மித்ரம் கிம்ஸ்விங் மித்ரம் மரிஷ்யத:

(இ-ள்) வேற்று நாடு சென்றவனுக்கு நட்பாவது எது? இல்லறத்தை நடத்துமவனுக்கு நட்பாவது யார்? பிணியாளனுக்கு நட்பினர் யாவர்? இறப்பவனுக்கு நட்பாவது எது? எ-ம்.

தர்ம:- வித்யா ப்ரவஸதோ மித்ரம் பார்யா மித்ரம் க்ருஹே ஸத:।
ஆதுரஸ்ய பிஷங் மித்ரம் தானம் மித்ரம் மரிஷ்யத:॥

வித்யாப்ரவசதோ மித்ரம் பார்யா மித்ரம் க்ருஹேஸத:
ஆதுரஸ்ய பிஷங்மித்ரம் தானம் மித்ரம் மரிஷ்யத:

(இ-ள்) (34) அயல்நாடு சென்றவனுக்கு நட்பாவது கல்வியாம். (35) இல்லறத்தை நடத்துமவனுக்கு நட்பாவது மனைவியாம். (36) பிணியாளனுக்கு நட்பாயிருப்பவன் மருத்துவனும். (37) இறப்பவனுக்கு நட்பாவது தனமாம். எ-ம்.

தொடரும்.

(ம) இனி, முற்கூறப்பட்ட சிந்தை ஒழித்தல் முதலியவற்றிலும் அசக்தனானவன் கைக்கொள்ளத்தக்க வேறுசில சுலபசாதனங்கள் உரைக்கப்படுகின்றன.

(34-37) இந்த, 'இறப்பவனுக்கு நட்பாவது தானமாம்' என்ற வாக்யத்திற்கு முன்புள்ள மூன்று வாக்யங்களும் உவமையாக அமைந்துள்ளன. எவ்வாறெனின்; 'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்றபடி கல்வியறிவுடையான் அந்நியதேசத்திற்குச் சென்றானாயினும் அவ்விடத்திலும் அவனுக்கு அக்கல்வியானது துணையாய் நின்று சிறப்பைத் தருவதுபோல் பயன் கருதாது செய்யும் தானமானது இம்மையிற் புகழைத்தருவதேயன்றி மறுமையிலும் நன்மையைப் பயக்குமென்பதாம்.

இல்வாழ்வானுக்கு மனைவியானவள் அவன் செய்யும் தர்மங்கட்குத் துணையாய்நின்று உதவுவதுபோலத் தானமும் இவன் செய்யும் நல்லறங்கட்குத் துணையாய்நின்று இவனுக்கு உதவிபுரியுமென்றறியத்தக்கது.

நோயாளனுக்கு மருத்துவன் மருந்து முதலியன கொடுத்து நோயையகற்றி இன்பத்தை விளைப்பதுபோல தானமும் முமுக்ஷுவான ஜீவனுக்கு ஸத்ஸங்கம் முதலிய வற்றைத் தந்து இன்பத்தைத் தருவதாயிருக்கும். இதனால் இத்தகைய தானத்தைத் தன்னுயிபன்றவரை முமுக்ஷுவான ஜீவன் அவசியம் கைக்கொள்ள வேண்டுமென்பது பெறப்படும்.

ஸ்ரீ:

"அருள்கொண்டாடுமடியவர்" வ்யாக்யானம்.

[ஸ்ரீவானமாமலை மடாதீனத்தின் உபயவேதாந்த வித்வானுயெழுந்தருளியிருந்தவரும், ஸ்ரீ. உ. வே. வித்வான் பக்ஷிராஜையங்கார்ஸ்வாமி குமாரருமான வானமாமலை ஐயங்கார்ஸ்வாமி எழுதியது.]

(213-ம் பக்கத்தொடர்ச்சி).

ஆழ்வாரும் இப்படி மூன்று பர்யாயம் பார்த்தும் ஒருவரும் திருந்தாதபடியைக்கண்டு சோகித்துக்கிடக்க ஈசுவரனும் இவரைப் பார்த்துஆழ்வீர்! இங்ஙனே சோகிக்கக்கடவீரோ? நாம் சோம்பாதிப் பல்லுருவையெல்லாம் படர்வித்து வருகிறபடி கண்டீரே. என்று ஆமத்தையறுத்தும் பசியை மிருத்துச் சோறிடுவாரைப்போலே சோகத்தைப்போக்கி ஆசையை மிகுத்து அதுக்குத் தாரகமாக 'உண்ணுஞ்சோறு பருகுநீ' ரான தம்முடைய குணாவிஷ்காரத்தைப் பண்ணிக்கொடுக்க இவருமீண்டெழுந்து அவன் காட்டிக்கொடுத்த குணந்தன்னையே முதலில். "உயர்வறவுயர் நலமுடையவன்" என்று பாடத்தொடங்கினர்.

இப்படிப் பாடிவருகையில் தத்விஷயமான பக்தி ததீயவிஷயத்தளவுஞ்சென்று "அடியார் குழாங்கள்" என்றும், "கேசவன் தமர்" என்றும் இவர் சொல்லக்கேட்டு, இவர் ருசியிருந்தபடி கண்டு நடுவில் ததீயவிஷயமான வெளிச்சிறப்பைப் பண்ண, "பயிலுஞ்சுடரொளி' யில் ஒருபர்யாயம் அத்தைப்பேசினர். மேற்செல்லச்செல்ல அதிலே ருசியுடைய்வராய், "பொலிக பொலிக பொலிக" என்றும், 'திருமாலடிகளைப் பூசிக்க நோற்றார்களே" என்றும், "தொண்டன் தொண்டன் சடகோபன்" என்றும் இவர் பேசுவதைப்பார்த்து இனி யிதுக்கவ்வருகில்லை என்னும்படியான வெளிச்சிறப்பைப் பண்ணிக்கொடுக்க, "நெடுமாற்கடிமை" யில் இதரவிஷயத்தை உபேக்ஷித்துச் சரம பர்வத்தையே ப்ராப்யமாகப் பேசினர். ஒரு மரம் வைத்தவன் அது பூக்கிறமட்டும் பூவிலாசை கொள்வான். பூத்தபின்பு பழத்

தில் ஆசைகொண்டு பூவிலாசையை மறப்பன். அதுபோலேயாயிற்று இவரும். ‘‘மேஹொதூணா’’ ‘‘மந்தோத்கண்டா’’ இத்யாதி மேலுள்ளவையெல்லாம் ‘அடியாரோடிருந்தமை’ என்கையாலே தச்சேஷமாயிருக்கும்.

இப்படி அர்த்தபஞ்சக ஸ்வரூபத்தையும் அர்ச்சாதிகதியையும், ‘மாமணிமண்டபத் தந்தமில்பேரின்பத் தடியரோடிருந்தமை’ என்று ஸ்ரீவைகுண்டத்தில் திருமாமணிமண்டபத்தில் ‘‘அடியார்கள் குழாங்களுடன்கூடுவதென்றுகொலோ’’ என்று அடியில் ப்ரார்த்தித்தபடியே நித்யமுக்தர்களான பாகவத திரளிலிருந்தபடியும் சொல்லி, ‘‘அயனை யரனை யவாவறச் சூழரியை யலற்றி, அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன், அவாவிலந்தாதிகளாலிவையாயிரம்...’’ என்று சொல்லித் தலைக்கட்டினார்; திருவாய்மொழியில்.

எங்ஙனே சொல்லினு மின்பம் பயக்க’’ வற்றாய், ‘‘ஊரும் நாடு முலகமுமவனுடைய பேரும் தார்களுமே பிதற்’’ றும்படி கற்பித்த இவ்வாயிரத்தையும், ‘‘ஸ்வாவிராஃ வஸிஷ்டதஸ்ஙெநஃ’’ ‘‘ஸசாபிராம பரிஷத் க்தச்சநை:’’ என்று அசுவமேதமஹாமண்டபத்தில் குசலவாள் கானம்பண்ணின ஸ்ரீராமாயணத்தைப் பிராட்டியன்றியில் கேட்டார் வாயாலே கேட்டவிழவுதீர ‘‘இன்பம் பயக்கவெழில் மலர்மாதருந்தானுமாய்’’ ஆழ்வார் திருவாயாலே நேரில் கேட்டு, ‘‘பண்ணார் பாடலின் கவிகளைப் பாடித்தென்னு வென்னும்’’ ‘‘ஏற்கும் பெரும்புகழ் வானவரீசன் கண்ணன் தனக்கு, ஏற்கும் பெரும்புகழ் வண்குருகூர்ச்சடகோபன் சொல், ஏற்கும் புகழாயிரமாயிருந்தது! என்று கொண்டாடி நம்மனோரதம் ஒருபடி தீரப்பெற்றோமே. உம்முடைய மனோரதம் ஒருபடி தீரப்பெற்றதே; என்று தலைகுலுக்கி ஆநந்த நிர்ப்பரனானான்.

இப்படி ஈசுவரன் தலைகுலுக்கினபடியைக் கண்டும், பாட்டின் சீர்மையை அநுஸந்தித்தும் ‘‘இன்கவிபாடும் பரமகவிகளால், தன் கவி தான்தன்னைப்பாடுவியாது’’ மெல்வியலாக்கைக் கிரிமியான என்னை முதல்வந்து புகுந்து ‘‘என்னைத் தன்னாக்கித் தப்புதலின்றித் தனைக்கவிதான் சொல்லி’’ ‘‘யானாய்த் தன்னைத் தான்பாடி’’ என்

றும், என்னையிட்டு "அடியார்க்கின்பமாரி" செவிக்கினிய செஞ்சொல்" லான கவிபாடுவதே. பல்லியின் சொல்லுஞ்சொல்லாவதே. என்று விஸ்மயித்து, "எற்ற நோற்றேற்கினியென்ன குறையெழுமையுமே" என்றும் "கவிசொல்லவல்லேற்கினிமாறுண்டே" என்றும் இனியார் நிகரகல்வானத்தே" என்றும், "மாறுளதோவிம் மண்ணின்மிசையே" என்றும், உள்ளடங்காத ஆநந்த நிர்ப்பரராய்த் தாமே புகழ்ந்து கொண்டாடி ஈறிலின்பத்திருவெள்ளத்து மூழ்கினார்.

ஈச்வரன் தன் ஸ்வரூபாதிகளைக் கிரமத்திலே காட்டிக்கொடுக்க ஆழ்வார் அருளின பக்தியின் ப்ரபாவத்தாலே "நின் திருவெட்டெழுத்துங்கற்று மற்றெல்லாம் பேசிலும் நான் கற்று உற்றது உன்னடியார்க்கடிமை" என்கிறபடியே அதில் ஸாராம்சமான சரமபர்வநிஷ்டையை ஆராய்ந்து தெரிநதெடுத்து விளக்கிப்பேசினரென்பதுவே முக்யம் பரமஹம்ஸரான இவருக்குப் பகவத்விஷயம் நீராம்சமாய், ததீயவிஷயம் க்ஷீராம்சமானபடி.

ஆனல், மதுரகவிகளைப்போலே அத்தையே தனித்துச்செல்லாதே கலந்து விதித்தது. "[illegible]" "மந்த்ரம் யத்நேந கோபயேத்" என்ற நியாயத்தாலே அநதிகாரிகள் எளிதில் அறியாமைக்காக. திரௌபதியின் குழல் விரிந்திருப்பதைக்கண்டு தூது ஸ்ராத்யங்கள் பண்ணியும் செய்வது காணுமல் ப்ரமித்து அர்ஜூனனுக்கு ஷட்கத்ரயத்தையும் (பதினெட்டு அத்யாயத்தையும்) உபதேசித்துப் பின்பு, ഇദം തു തേ ഗുഹ്യതമം പ്രവക്ഷ്യാമ്യനസൂയവേ" "இதம் துதே குஹ்பதமம் ப்ரவக்ஷ்யாம் யநஸூயவே" என்று கைப்பட்ட மாணிக்கத்தைக் கடலிற் போட்டேன்; யாருக்குச்சொல்லவேண்டிய இந்த ரஹஸ்யத்தை யாருக்குச் சொன்னேனென்று பதன்பதன் என்றிருந்த கீதாசார்யனைப்போலே யாகவொண்ணுதென்று கலந்தும் மறைத்தும் பேசினராகவுமாம். அன்றிக்கே தமக்குப் பிரதானோத்தேசியர்களான பாகவதர்களைக் கவிபாடத் தொடங்கியவர் அவர்கள் உகந்தவிஷயமென்று பகவத் விஷயத்தையும் சேர்த்துக் கவிபாடினராகவுமாம். ஆகையால் இவரும்

"திரிதந்தாகிலும் தேவர்பிரானுடைக், கரிய கோலத் திருவுருக் காண்பன்" என்று ஆசார்யன் உகந்த விந்த அர்த்தத்தைத் தெளிவு படுத்தினர்.

மஹார்ணவத்தைப் பார்த்தால் முகப்பிலே க்ஷாரநீரும் நொங்கும் நுரையும் திரையுமே தோற்றும். உள்ளே ஆழ்ந்து அவகாஹித்துப் பார்த்தாலிறே முத்துக்களையும் ரத்னங்களையும் காணலாம். அப்படியேயாயிற்று த்ராவிடவேத ஸாகரமும். அதுபோலன்றிக்கே மதுரகவிகளும் தகதகபரராய் ஸகலாத்மோஜ்ஜீவநார்த்தம்ர்க ஏராரெதிராசரின் னருளால், "ஆசையுடையோர்க்கெல்லா மாரியர்காள் கூறுமின்" என்று வரம்பறுத்த எம்பெருமானுரைப்போலே பார்த்த பார்த்தவிடமெங்கும் முத்தும் ரத்னமுமாய் ப்ரகாசிக்கும்படி இந்த விலக்ஷணரத்னகரத்தைப்பார்த்து மறைத்துப்போந்தார். இவர் அநர்த்த கௌரவத்தைப்பார்த்து வெளியிட்டார். இப்படி பரார்த்தாஸஹிஷ்ணுதையிறே ஸ்ரீவைஷ்ணவனுக்கு லக்ஷணமாவது.

தொடரும்.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

[காரப்பங்காடு ஸ்ரீமது உபயவேதாந்த வித்வான்
சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(163-ம் பக்கத்தொடர்ச்சி.)

இப்படி தத்வஹித புருஷார்த்தங்கள் நிரூபிக்கப்பட்டன. இப்படியிருந்துள்ள புருஷார்த்த ப்ராப்திக்கு ஸாதநமான உபாயாநுஷ்டானம்செய்த அதிகாரியிருக்கும்படி நிரூபிக்கப்படுகிறது.

இங்கு உபாயம் என்றது பக்தி, ப்ரபத்தி இவைகளே. பக்திநிஷ்டன் நித்யநைமித்திககர்மாக்களை, பலாபிஸந்தியில்லாமல் தன்னுல் உபாயமாக அநுஷ்டிக்கப்படுகிற பக்திக்கு அங்கங்களாக

அநுஷ்டிக்கக்கடவன். அப்படி அநுஷ்டிப்பதும், அங்கியானபக்தி யோகாநுஷ்டான காலத்துக்கு அவிருத்தமான காலத்தில் ஏற்படும். பக்தி யோகாநுஷ்டான தசையில், அங்கபூதங்களான கர்மாக்களுடைய லோபம் ஏற்பட்டாலும், அது ப்ரத்யவாயாவஹமாகமாட்டாது. ஆதலால் விஹிதத்வாகாரம் த்யாஜ்யம், விஹிதத்வபுத்யா அநுஷ்டிக்கும்பக்ஷத்தில் யோகதசையிலேற்படும் கர்மலோபம் ப்ரத்யவாயாவஹமாம். ஆனால், "யோகமேவ நிஷேவேத" "யோகமேவ நிஷேவேத" என்கிற வசனத்தின்படி அநுஷ்டிக்கப்படுகிற யோகமே ப்ராய:சித்தமாகலாமென்னில், அது ப்ராமாதிகமாக ஏற்படுகிற கர்மலோபத்துக்கு ப்ராய:சித்தமாகுமேயொழிய புத்தி பூர்வகமாக ஏற்படுகிற இதற்கு ப்ராய:சித்தமாகாது. இதுவும் அபுத்தி பூர்வகமென்னில் கர்மலோபாவஹமான பக்தியோகாநுஷ்டானமே ஸம்பவியாது. புத்தி பூர்வகமாக ஏற்படுகிற கர்மலோபத்துக்கும் இதுவே ப்ராய:சித்தமென்று சொல்லில், காதாசித்கமாக ஏற்படும் புத்திபூர்வக கர்மலோபத்துக்கு ப்ராய:சித்தமாகாததனையொழிய அஸக்ருத்தாக நேரும் புத்தி பூர்வக கர்மலோபத்துக்கு இது ப்ராய:சித்தமாகாது.

அப்படி புத்தி பூர்வக கர்மலோபம் அடிக்கடி ஏற்படும் பக்ஷத்தில் பக்தியோகாநுஷ்டானத்துக்கு 'ஸந்த்யாஹீநோऽஶுசிர் நித்யமநர்ஹ: ஸர்வகர்மஸு' 'ஸந்த்யாஹீநோऽஶுசிர் நித்யமநர்ஹஸ் ஸர்வகர்மஸு' என்கிற வசனப்படி அநர்ஹனவன். இந்த விஷயம் 'அக்நிஹோத்ராதிஷு தத்கார்யாயைவ தத்தர்சநாத் ஸஹகாரித்வேந ச, ஸர்வாபேக்ஷா ச யஜ்ஞாதிஶ்ருதேரஶ்வவத்' 'அக்நிஹோத்ராதிஷு தத்கார்யாயைவ தத்தர்சநாத் ஸஹகாரித்வேந ச' இத்யாதிகளில் ஸ்பஷ்டம். 'விஹிதத்வாச்சாஶ்ரம கர்மாபி' 'விஹிதத்வாச்சாச்ரம கர்மாபி' என்பது புபுக்ஷு விஷயம்.

ஆதலால் ஸ்வவர்ண ஸ்வாசிரமோசிதங்களான நித்திய நைமித்திககர்மாக்களை, அங்கியான பக்தியோகத்துக்கு அவிருத்த காலங்களில் அங்கபுத்யா அநுஷ்டிக்கக்கடவன்.

திருமந்த்ரத்தில் நம:பதார்த்தமான அநந்ய சரணத்வமாகிற உபாய பாரதந்த்ர்யரூப ஸ்வரூபத்துக்கு விருத்தமென்கிற புத்தியா

னும், துஷ்கரத்வ புத்தியாலும் ப்ராரப்த கர்மாவஸாநத்திலேயே பலம் ஏற்படுகிறபடியாலும் பக்தியோகத்திலிழியாமல் அநந்யசரணத்வரூப ஸ்வரூபத்துக்கு உசிதமாயும் ஸகிருத்கர்த்தவ்யமாகையாலே ஸுகரமாயும் ப்ராரப்த சரீராவஸாநத்திலேயே பலமேற்படுகிறபடியாலே அவிளம்ப்யபலப்ரதமாகையாலும், 'க்ஷமே வோவர்யஹ-முதொமெ ஹவெதி ஹாதூநாசதிஃ' 'த்வமேவோபாயபூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி:' இத்யாதி ப்ரமாணத்தின்படி ஸர்வேசுவரனையே உபாயமாகப் பற்றுகையாகிற அதிகாரி விசேஷணீபூத ப்ரபத்திநிஷ்டனுக்கு நித்ய நைமித்திக கர்மாக்கள் அங்கங்களாகக்கொள்ளில் ஸஹகாரிநிரபேக்ஷமான ஸித்தோபாய நைரபேக்ஷ்யத்துக்கு ஹானி வருகையாலும், 'ஸர்வதர்மாந்பரித்யஜ்ய' என்று ஸர்வதர்மத்யாகம் அங்கமாக ஏற்படுகிறபடியால் விஹிதத்வபுத்யா அநுஷ்டிப்பதும் விருத்தமாகையால் ஸர்வஸ்வாமியான ஈசுவரனுடைய ஆஜ்ஞா ப்ரவர்த்தநத்தில் ராகத்தாலே விதிபராமர்சமில்லாமல் போகரூபமாக அநுஷ்டிப்பதால் ஸர்வேசுவரனுடைய முகோல்லாஸமே ப்ரயோஜனமாக ஏற்படுகிறபடியால் கேவல பாரார்த்தகைங்கர்யபுத்யா அநுஷ்டேயம்.

ஸங்கல்ப பேதத்தாலே கர்மபேத மேற்படுகிறபடியால் 'ஸர்வதர்மாந்பரித்யஜ்ய, என்கிற இடத்தில் சொல்லப்படுகிற த்யாக விஷயமான கர்மாக்களைக்காட்டிலும் கேவல கைங்கர்யபுத்யா அநுஷ்டிக்கப்படுகிற கர்மாக்கள் பின்னங்களாகையாலே அங்கமான ஸர்வதர்மத்யாகத்துக்கும் விரோதமில்லை.

இப்படி அனுஷ்டிப்பதும் ப்ரபத்திநிஷ்டனுக்கு ஏற்படுகிற விசேஷ தர்மங்களுடைய அநுஷ்டானத்துக்கு அவிருத்த காலங்களில் ஏற்படும். நித்திய நைமித்திக கர்மாக்கள் ஆஜ்ஞா ஸித்தங்களேயாகிலும் அது ப்ரபந்நனுக்கும், மற்றவர்களுக்கும் ஸாதாரணங்களாகையாலும், ப்ரபந்நனுக்கு ஆஜ்ஞா ஸித்தங்களான விசேஷ தர்மங்கள் இவனுக்கே அஸாதாரணங்களாகையாலும் அஸாதாரண தர்மாவிருத்த காலங்களிலேயே ஸாதாரண தர்மங்கள் அநுஷ்டிக்க வேண்டுகையாலே அஸாதாரண தர்மாநுஷ்டான காலங்களில் ஏற்படுகிற ஸாதாரண தர்மலோபம் ப்ரத்தியவாயாவஹமாகாது.

இந்த விஷயம், '𑌯𑌤𑍍𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑌾𑌂 𑌪𑍁𑌂𑌸𑌾𑌂 𑌯𑌤𑌿𑌕𑌰𑍍𑌮 𑌵𑌿𑌲𑍁𑌮𑍍𑌪𑌤𑌿, 𑌤𑌤𑍍𑌕𑌰𑍍𑌮 𑌤𑍇 𑌪𑍍𑌰𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌤𑌿𑌸𑍍𑌰𑌃 𑌕𑍋𑌟𑍍𑌯𑍋 𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃' 'யத்கர்மகுர்வதாம் பும்ஸாம் யதிகர்மவிலும்பதி, தத்கர்ம தே ப்ரகுர்வந்தி திஸ்ர: கோட்யோ மஹர்ஷய:' இத்யாதி ப்ரமாண ஸித்தம். இவ்விஷயம் கீழே விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டது.

இந்த ப்ரபத்திநிஷ்டனும் ஸ்வநிஷ்டன், உக்திநிஷ்டன், ஆசார்ய நிஷ்டன் என்று மூன்று வகையாயிருப்பன். ஸ்வனிஷ்டனுவான்:— ப்ரபத்திசாஸ்த்ரத்தில் யதாவஸ்திதஜ்ஞானமுள்ளவனுய் ப்ரபத்தியை யதாவத்தாக அநுஷ்டித்த ஆசார்யனை ஆசிரயித்து ததுபதிஷ்டமார்க்கத்தாலே நேரே ஸர்வேசுவரனை யுபாயமாகப்பற்றினவன்.

உக்திநிஷ்டனுவான்:— ப்ரபத்தி விஷயத்தில் ஸமுதாயஜ்ஞானமுடையவனுய் விசேஷஜ்ஞானமில்லாதிருக்கிற அதிகாரி; ப்ரபத்தி சாஸ்திரத்தில் யதாவஸ்திதஜ்ஞானமுடையவனுய் ப்ரபத்தியை யதாவத்தாக அநுஷ்டித்த ஆசார்யனை ஆசிரயித்து, அவனுல் உபதிஷ்டமான ப்ரபத்திமந்த்ரத்தினுடைய அநுச்சாரணத்தைப் பண்ணுகிறவன்.

ஆசார்ய நிஷ்டனுவான்:— கீழே நிரூபித்தப்படி பூர்ணமான ஜ்ஞானனுஷ்டானமுடைய ஆசார்யனை ஆசிரயித்து அவனுக்குப் பாதந்திரனுய் அவனுல் அநுஷ்டிக்கப்பட்ட ஆத்மாத்மீய பரந்யாஸரூபையான சரணுகதியில், தான் ஆத்மீயனுக அந்வயித்து, தான் தனித்து சரணுகதி பண்ணுமல் ஆசார்யாபிமானத்தில் ஒதுங்கியிருக்குமவன்.

இந்த அதிகாரி மற்ற அதிகாரிகளிற்காட்டில் உத்க்ருஷ்டன். எப்படி '𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑌤𑌿𑌗𑌮𑍍𑌯𑍋 𑌭𑌵𑍇𑌦𑍍𑌧𑌰𑌿𑌃' அஜ்ஞ ஸர்வஜ்ஞபக்தாநாம் கெதிர்கெம்யோ பவேத்தரி:' என்கிற ப்ரமாணத்தின்படி சக்தனுகிலுமாம், அசக்தனுகிலுமாம் ப்ரபத்திநிஷ்டனுமவன் பக்திநிஷ்டனைக்காட்டிலும் உத்க்ருஷ்டனுகிறுனே; அப்படியே சக்தனுகிலுமாம், அசக்தனுகிலுமாம் ஆசார்ய நிஷ்டையில் அந்வயித்தவன் மற்றவர்களைக்காட்டிலும் உயர்ந்தவனுவான்.

இந்த ஆசார்ய நிஷ்டைக்கு அஜ்ஞரோடு ஸர்வஜ்ஞரோடு சக்தரோடு அசக்தரோடு வாசியற ஸர்வரும் அதிகாரிகள்; இதற்கு ப்ரமாணோபபத்திகள் இனி நிரூபிக்கப்படும்.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஆழ்வார் உபதேசம்.

உலகத்தில் உபதேசிக்கின்ற பெரும்பாலரும் ஆசார்யபதம் நிர்வஹிக்கவேண்டுமென்று கருதியும், க்யாதிலாபபூஜையைக் குறித்தும் உபதேசிக்கக் காண்கிறோம். அதுபோல ஆழ்வார் உபதேசிக்கவில்லையென்று ஆழ்வாரின் உபதேசத்தின் பெருமை இங்குச் சொல்லப்படுகிறது.

ஆழ்வார் "ஏபாவம்பரமே" 'ஓ! ஈதென்ன? நாம் பகவத்குணாநுபவஞ் செய்வதை ஒழித்து அறிவற்றவர்களாகிய ஸம்ஸாரிசேதனர்கட்குப் பகவத் பரத்வத்தைக் குறித்துச் சொல்லும்படி நம்பரமாக வந்து முடிந்ததே' என்று பிறருக்கு உபதேசிக்கிற விஷயத்தில் வெறுப்புடையவராயிருந்தாராதலால் இவருக்கு ஆசார்யபதம் நிர்வஹிக்க வேண்டுமென்ற கருத்தில்லை யென்பதறியலாம். "நீசனேன் நிறைவொன்றுமிலேன்" என்று தம்மைத் தாழநினைத்தாராதலால் க்யாதியில் நோக்கமில்லையென்பதும், "கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பாக" என்று செல்வத்தை அநர்த்தகரமாக எண்ணினாராதலால் லாபத்தில் தமக்குப் பற்றில்லை என்பதும், "ஒதவல்ல பிராக்கள்" என்று தம்மோடு எப்பெருமானுடைய குணவிசேஷங்களைச் சொல்லவல்லவர்களைத் தமக்குத் தலைவராகவும், "தொண்டன் தொண்டன்" என்று தம்மைத் தாஸனாகவும் கருதினாராதலால் பிறர் தம்மைப் பூஜிக்கிற விஷயத்திற் சிறிதும் குறிப்பில்லை என்பதும் தெளிவாக அறியலாம்.

பின்னை இவர் யாதுகாரணம்பற்றி உபதேசித்தாரெனின்; தாம் அநுபவித்த பகவத்விஷயம் தனியேயிருந்து அநுபவிக்கும் தரத்ததன்றிக்கேயிருக்கத் தமக்கு உசாத்துணையாவாரெவரேனுமுண்டோ

என்று உலகில் கண் வைத்தபோது தாம் பகவத் விஷயத்தில் எவ்வளவு பற்றுடையவராயிருந்தனரோ அவ்வளவு பற்று ஸம்ஸாரிகளுக்கு இதரவிஷயத்திலிருப்பதைக் கண்டார். "ஆந்தோ! இவர்கள் பகவத் விஷயத்திற் சிறிதும் கண் வைக்காது இதரவிஷயத்திற் பற்றுடையவர்களாய் அநர்த்தப் படுகின்றனர்களே இனி எவ்வாறுவது இவர்கள் அநர்த்தத்தைப் பரிகரிக்கவேண்டும்" என்ற கிருபையோடு உபதேசிக்கத் தொடங்கினாரென்றே கொள்ளவேண்டும். ஆகலால் இவர் உபதேசம் ஒப்பற்ற நன்மையைப் பயக்குமென்றறியத் தக்கது. அது வருமாறு:—

ஸம்ஸாரிகளே! நீங்கள் இதரவிஷயத்திற் பற்றிய பற்றனைத்தையும் அடியோடுவிடுமின். ராஜபுத்திரன் சிறையிலகப்பட்டிருப்பானேல் அவனுக்கு முடிசூடி அரசாள்வதைக்காட்டிலும் சிறையினின்றும் விடுபடுவதே பிரயோஜனமாகத் தோற்றுமன்றோ! அதுபோல நீங்கள் இங்ஙனம் விடுவதே பிரயோஜனமாகக்கொண்டு உங்களுயிரை விடாகவுடைய ஸர்வேசுவரனிடத்தில் ஆத்ம ஸமர்ப்பணஞ் செய்வீராக. இனி, நீங்கள் பற்றிய விஷயம் அல்பாஸ்திரமான தோஷமுடையதாதலால் "நீண்டகாலம் இதரவிஷயங்களைப்பற்றிப் போந்த நாங்கள் இப்பொழுது அவற்றை அடியோடு விடுவதெங்ஙனம்?" என்று கருதுதற்கு மிடமில்லை. உங்கள் உயிர்பற்றி நிற்கும் சரீரங்களோ மின்னலைக்காட்டிலும் நிலைபேறற்றனவாக விருக்கின்றன. இதை ஆராயுமிடத்து ப்ராப்த விஷயமாகிய ஸர்வேசுவரனை மனனஞ்செய்ய வேண்டுமென்பது விளங்கவில்லையா?

ஆனால் நீங்கள் "எண்ணவொண்ணாத காலமெல்லாம் இதர விஷயங்களைப் பற்றிப்போந்தோம், அவற்றை விடுகைக்கும் அவ்வளவு காலம் வேண்டுமே?" என்று கருதவும் வேண்டா. உங்களை நான் விடச்சொல்வது அஹங்காரம் மமகாரமென்ற இரண்டையாம். இவை இரண்டுமே பிறவி வித்துக்களாயிருக்கும். இவற்றை யடியோடுவிட்டு எம்பெருமானை யடைவீரேல் உயிருக்கு இஃதோடு ஒப்பதும் மிக்கதும் பிறிதொன்றில்லை. மேலும் என்னால் உபதேசிக்கப்பட்ட பரம்பொருளாகிய ஸர்வேசுவரன் சேதநாசேதநங்களைக் காட்டிலும் வேறுபட்டவனாய், அளவிடவொண்ணாத ஆநந்த குண விசேஷமுடையவனாயிருப்பான். அவன் பற்றறார் பற்ற நின்றவனாதலால் நீங்களும் பற்றற்றே அவனை யடையவேண்டும்.

இப்படி இதரவிஷயத்தில் ஆசையை அடியோடுவிட்டு யோகாப்யாஸத்தைக் கைப்பற்றுமளவில் ஆத்மஸ்வரூபம் ப்ரகாசிக்கும். அது நித்யமாய் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமுடையதாதலால் அதை அநுபவித்துக்கொண்டிருந்தால் போதுமானது என்ற உணர்ச்சி தோன்றும்.

இதைத்தான் கைவல்யமோக்ஷமென்பர்கள். இதில் கருத்தைச் செலுத்துவதும் மிகுந்த அநர்த்தமாகும். ஆகலால் இது விஷயத்திலுண்டாகும் எண்ணத்தையுமொழித்து நிலைநின்ற புருஷார்த்தமாகிய ஸர்வேசுவரனை யடைவீர்களாக.

ஸர்வேசுவரன் ஒன்றுமொரு குறைவில்லாத பரிபூரணனும், தலைவனுமிருக்கும் அறப்பெரியோனானவன். அவன் எங்கட்கு எவ்வாறு வசப்படுவானென்று ஐயுறுவீர்களென்று கருதுகிறேன். இங்ஙனம் நீவீர் கருதற்க. அவன் தன்னைத் தஞ்சமாகவடைந்தவரிடத்தில் மிகவும் பக்ஷமுடையவனாயிருப்பான். இன்னும் அவன் அதிகாரி அநதிகாரி என்ற வாசியற எல்லோரும் வந்தடையும்படி நல்லவியல்புடையவனாயு மிருப்பானன்றோ! ஆகலால் நீங்களும் அவன் விஷயத்தில் அன்புடையவர்களாய் அவனுடைய எல்லாக் கைங்கர்யத்திலும் அந்வயிக்கக் கடவீர்கள்.

ஸர்வேசுவரன் தன்னையடைந்தவரிடத்தில் பக்ஷமுள்ளவனானும் அளவிடவொண்ணாத லீலாவிபூதி நித்யவிபூதி என்ற இரண்டு விபூதிகளையுடையவனாயிருக்கிறான். நாங்கள் மிகவும் அற்பகுணமுடையவர்களாக விருக்கிறோம். ஆனபின்பு அவனை எங்களாலடையப்போமோ? கடலிற்பட்ட துரும்புக்கு 'நாம் கடலால் தள்ளப்படுவோம்' என்றேனும் கடலுக்குத் துரும்பைத் தள்ளிவிடவேண்டுமென்றேனும் இரண்டிற்கும் எண்ணமில்லாதிருக்கவும் துரும்பு திரைமேற்றிரையாகத் தள்ளுண்டு கரையிற் சேருகிறதன்றோ! அப்படியே எம்பெருமானுடைய ஐசுவர்யதரங்கங்கள் எங்களைத் தள்ளிவிடுமே. நாங்கள் என்செய்வதென்று கருதுவதுபோல் காணப்படுகிறீர்கள். அவனுடைய லீலைக்குச் சாதனமாயிருக்கின்ற இந்த விபூதியும், போகத்திற்குச் சாதனமாயிருக்கின்ற நித்யவிபூதியுமெல்லாங் கண்டு, இவையெல்லாம் நமக்கு வகுத்தஸ்வாமியாகிய ஸர்வேசுவரனுடையனவாம். நாமும் அவனுடைய ஐசுவர்யத்தைச் சார்ந்தவராவோம்; என்ற ஸம்பந்த ஜ்ஞானமுண்டானால் அவனை எளிதிலடையலாம். கடலில் 'நமக்கு வாழுமிடமிதுவாம்' என்று பற்றிக்கிடக்கிற நீர்வாழ்ஜாதிகளைக் கடல் தள்ளிவிடாமல் ஸம்பந்தஜ்ஞானமில்லாத துரும்பையன்றோ அது தள்ளுகிறதென்பதறியீரோ?

இனி, அவனைப் பஜிப்பதற்குரிய உபகரணங்களெவை? என்று கேட்பீரேல் அவற்றையுமுரைக்கிறேன்:— மனம் வாக்குக் காயம் என்ற இம்மூன்றும் தோன்றியதின் பிரயோஜனத்தை நிரூபித்துப் பார்த்தால் மனம் அவனை நினைப்பதற்கும், வாக்கு அவனை வாழ்த்துவதற்கும், காயம் அவன் விஷயமான கைங்கர்யஞ் செய்வதற்கும் உண்டாக்கப்பட்டனவென்பது விளங்கும். ஆதலால் இவை அப்ராப்த விஷயங்களில் ஆழ்ந்துவிடாமல் அவற்றினின்றும் மீட்டு

ப்ராப்த விஷயமாகிய ஈசுவர விஷயத்திலாக்க வேண்டும். உங்கள் வசமாயிருக்கிற இந்த மூன்று கரணங்களையும் அவன் விஷயத்தில் உபயோகப்படுத்துவதைத் தவிர்த்துப் புறம்பே தேடிச்சென்று உபகரணங்களைக் கொணர்ந்து அவனைப் பஜிக்கவேண்டுமென்பதில்லை.

ஸர்வேசுவரன் தந்தகரணங்களை அவன் விஷயத்தில் ஈடுபடுத்த வேண்டுமென்பதில் எங்கட்கு யாதொரு ஆக்ஷேபணையுமில்லை. ஆனால் இந்த ஞாலமானது அவனைப் பஜனம் செய்யவொட்டாமல் தடுக்குமியல்பினையுடையதாயிருக்கிறது. அதனால் அவனை நாங்கள் பஜனம் செய்யுமாறெங்ஙனம்? என்று உங்கட்கு ஆசங்கை நிகழக்கூடும். அதற்கும் சமாதானம் சொல்லுகிறேன்; கேட்பீராக. அவன் தந்தகரணங்களை அவன் விஷயத்தில் உபயோகப்படுத்தவே பகவத் கைங்கர்ய விரோதிகளெல்லாம் தன்னடையே ஒழிந்துபோம். அதன் மேல் இந்த விரோதியான சரீரம் கழிந்துபோம்காலத்தை எதிர் பார்த்துக்கொண்டிருப்பீராக. இப்பொழுதுரைக்கப்பட்ட உபதேசம் மிகவும் நன்றாயிருக்கிறது. இதுகிற்க; அவனைப் பஜனம் செய்தற்குரிய மந்த்ரம் வேண்டுமே. அஃதியாது? என்று வினவுவீரேல் அம்மந்த்ரத்தையும் இப்பொழுதே உரைத்துவிடுகிறேன்; கேட்பீராக. அளவற்றனவாய் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபங்களையுடைய எல்லா ஆத்மாக்களையும், அளவற்றனவாகிய கல்யாணகுணங்களையுமுடைய நாராயண மந்த்ரமே பஜித்தற்குரிய மந்த்ரமாகும். இந்த மந்த்ரத்தின் மிக்கதோர் மந்த்ரமில்லையென்று வேத புருஷனும் தத்வதரிசிகளும் அருளிச்செய்துள்ளார்கள். ஆதலால் இந்த மந்த்ரத்தாற் சொல்லப்பட்ட எம்பெருமானுடைய (தன்னைபடைந்தாரை நழுவவிடாத) திருவடிகளை தஞ்சமாகப் பற்றுவீராக.

ஸ்ரீ:

மதிப்புரை.

தமிழ்ப் பேரகராதி:— சென்ற சில வருடங்களாகச் சென்னை ஸர்வ கலாசாலையார் தமிழ் மொழியின் பேரகராதி யொன்றனைத் தொகுத்து வெளியிடக்கருதிச் செய்துவரும் முயற்சியானது சிறிது சிறிதாகப் பலனளித்து வருகின்றது. இதன் முதல் தொகுதியின் மூன்று பகுதிகளும், இரண்டாவது தொகுதியின் முதல் மூன்று பகுதிகளும் இதுவரை நமது பார்வைக்கு வந்துள்ளன. ஆங்கிலம், தமிழ், ஸம்ஸ்க்ருதம் முதலிய பல மொழிகளிலும் தேர்ச்சியுற்ற பண்டிதர்களின் உதவியைக்கொண்டு மிகுந்த பொருட் செலவில் நடைபெற்றுவரும் இந்தக் கருமம் இங்ஙனமே விரைவாக இனிது

நிறைவேற வேண்டுமென்று விருப்பத்துடன் எதிர் பார்க்கப்படுகிறது. நிற்க;

இவ்வகராதியின் முதற் றொகுதியில் உயிர் வருக்க எழுத்துக்களை முதலாகவுடைய சொற்களும், இரண்டாந்தொகுதியின் முதல் மூன்று பகுதிகளில் உயிர் மெய் வருக்கத்து 'க' முதல் 'கை' வரையுள்ள எழுத்துக்களை முதலாகவுடைய சொற்களும் தெளிவாகப் பொருள் விளக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்ச் சொற்களுக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் தக்கவாறு விவரணமெழுதி, அவற்றின் பொருள் வழக்கிற்குப் பண்டை நூல் மேற்கோள்களையும் ஆராய்ந்து எடுத்துக்காட்டிச் செல்வது இவ்வகராதியின் நோக்கமென்று தெரிகிறது. இங்ஙனம் இதில் மேற்கோளாக எடுத்தாளப்படுவன சங்ககால இலக்கியங்களும், பழையவும் புதியவுமான இலக்கண நூல்களும், வடமொழி தென்மொழிகளில் அமைந்த நிகண்டுவகைகளும், சைவ வைணவ சமயநூல்களும், பிற்காலத் தமிழிலக்கியங்களும் முதலிய பலதிறத்தனவாகும். அவற்றுள்ளும் முக்கியமாக அஷ்டாதசரஹஸ்யம், ஆசார்யஹ்ருதயம், ஈடுமுப்பத்தாறாயிரம், உபதேசரத்னமாலை, ஆறாயிரப்படி பன்னீராயிரப்படி குருபரம்பராப்ரபாவம், திருவாய்மொழி நூற்றந்தாதி, திருவிருத்தவ்யாக்யானம், ஸ்ரீவசனபூஷணம் முதலிய ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் இதிற் ப்ரமாணமாகக் காட்டப்பெறுகின்றன என்பது இங்குக்குறிப்பிடத்தக்கது.

இப்புத்தகம் நல்ல காகிதத்தில் தடித்த எழுத்துக்களில் மிகவும் அழகாக அச்சிடப்பட்டு விளங்குகிறது. இதுபோன்ற பேரகராதி இக்காலத்தில் வேறின்மையால் இது தமிழ்மக்களுக்குப் பெரிதும் பயன்படுவதோடு, ஆங்கிலமுறையில் அச்சிடப்பட்டிருப்பதால் தமிழ்கற்கப்புகும் ஆங்கிலேயரனைவர்க்கும் இது விசேஷமாக உதவியாயிருக்குமென்பதில் ஐயமில்லை.

இதுபொழுது வெளிவந்துள்ளனவாய இவ்வகராதியின் ஆறு சஞ்சிகைகளில் முதல் இரண்டு சஞ்சிகைகள் தனித்தனி ரூ 4-க்கும், எஞ்சிய நான்கு பகுதிகளும் தனித்தனி ரூ 2-க்கும் விலைக்கு விற்கப்பெறுவனவாம். வேண்டுவோர், (1) S. P. C. K. Depository, Post Box 455, Vepery, Madras; (2) Messrs. Luzac & Co., 46, Great Russel Street, (opposite the British Museum) London, W. C. T. என்ற இடங்களிற் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் எஞ்சிய பகுதிகளும் இனி விரைவாகவே வெளிவந்து கொண்டிருக்குமென்று அறிக்கையின்மூலம் தெரிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

———

பத்திராதிபர்.